**புலவர் பொ. பொன்னம்பலம்:** திருமயம் தொகுதியில் ஏதாவது கிளை மருந்தகம் அமைக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறதா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் கால்நடை சிறு மருந்தகம் மட்டுமே தலைமையிடத்தில் செயல்பட்டு வந்தது. பின்னர் அத்துறை சீரமைக்கப்பட்ட பின் முறையான கால்நடை மருந்தகமாக 1970-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் தேதியன்று அது மாற்றப்பட்டது. மேற்கொண்டு தகவல் எதுவுமில்லை.

*Construction of dam on Varattar river*

* 74 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public works be pleased to state—

(*a*) whether the construction of anicut across varattar river in Ellapudiampatty in Harur Taluk has been taken up; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) இத்திட்டத்திற்கு ரூபாய் 3 இலட்ச செலவில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அணைக்கட்டு வேலையைத் தொடங்க ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்தப் புதிய அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் எத்தனை ஏக்கர் புதியதாக நிலங்கள் பாசனத்திற்குக் கொண்டு வரப்படும் என்று சொல்ல முடியுமா?

The Hon. Thiru S. J. SADIQ PASHA : By the execution of the scheme an extent of 69.44 acres of average cultivation in the above four tanks will get assured supply, besides bridging the gap to an extent of 14.13 acres. An extent of 118.18 acres of new ayacut in the above four tanks will also be brought under irrigation. The scheme will also benefit 86.96 acres under pond effect and 64;82 acres under direct ayacut.

திருச்சிராப்பள்ளி—மதுரை இருப்புப்பாதை

* 75 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியிலிருந்து மதுரை வரை உள்ள ரயில் பாதையை அகலப்பாதையாக ஆக்குவதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கரூர் வழியாக சேலத்திலிருந்து திண்டுக்கல் வரை அகலப்பாதை அமைத்தல், திண்டுக்கல்—தூத்துக்குடி (மதுரை வழி) இருப்புப்பாதையை அகலப்பாதையாக்குதல் (மணியாச்சியிலிருந்து திருநெல்வேலி